# நான் என்ன செய்ய வேண்டும்?

தொடர் - 43
ஏப்ரல் 2012

தொகுப்பு : Dr. B. வில்லியம் தர்ம ராஜா

**ஏசாயா**

2101 கர்த்தர் வாக்கைக் கேளாமல், பார்வோனின் பெலத்தினால் பெலக்கவும், எகிப்தின் நிழலிலே ஒதுங்கவும் வேண்டுமென்று எகிப்துக்குப் போகாதே (30:2)

2102 உன் பாவங்களினால் கர்த்தரைச் சங்கடப்படுத்தாதே; உன் அக்கிரமங்களினால் கர்த்தரை வருத்தப்படுத்தாதே (43:24)

2103 உன்னை உருவாக்கினவரோடே வழக்காடாதே (45:9)

2104 உன்னை உருவாக்கினவரை நோக்கி, என்ன செய்கிறாயென்று சொல்லாதே (45:9)

2105 கர்த்தரை யாருடைய சாயலுக்கும் சமமாக்காதே (46:5)

2106 கர்த்தரை யாருக்கும் ஒப்பிடாதே (46:5)

2107 பொன்னினாலும் வெள்ளியினாலும் தெய்வத்தை உண்டாக்காதே; அதைப் பணிந்து கொள்ளாதே (46:6)

2108 கர்த்தருடைய நாமத்தின் பரிசுத்தத்தைக் குலைக்காதே (48:11)

2109 கர்த்தரின் மகிமையை வேறொருவருக்குங் கொடாதே (48:11)

2110 கர்த்தரை அசட்டைப் பண்ணாதே (53:3)

2111 கர்த்தரை விட்டு உன் முகத்தை மறைக்காதே (53:3)

2112 கர்த்தரை எண்ணாமற் போகாதே (53:3, 57:11)

2113 கர்த்தருக்கு விரோதமாய்த் துரோகம் பண்ணி, பொய்பேசி, அவரை விட்டுப் பின் வாங்காதே (59:13)

2114 கர்த்தரை விட்டு பிற தெய்வத்தைப் பின்பற்றாதே (65:11)

2115 கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்து (66:4), அவருக்கு பிரியமில்லாததைத் தெரிந்து கொள்ளாதே (65:12, 66:4)

2116 கர்த்தருக்கு விரோதமாகப் பாதகஞ் செய்யாதே (66:24)

2117 உன் கிரியைகளின் பொல்லாப்பை கர்த்தருடைய கண்களுக்கு மறைவாக அகற்றிவிட்டு, தீமை செய்தலை விட்டுவிலகு (1:16)

2118 நாள் பாராதே (2:6, 57:3)

2119 அஞ்சனம் பார்க்கிறவர்களிடத்திலும், குறிகாரரிடத்திலும் விசாரியாதே (8:19)

2120 ஜோசியம், நட்சத்திரம் பார்க்கிறவர்கள், அமாவாசி கணிக்கிறவர்களை நாடாதே (47:13)

2121 உயிருள்ளவர்களுக்காக செத்தவர்களிடத்தில் விசாரியாதே (8:19)

2122 மனப்பெருமையாயிராதே (9:10, 28:1,3)

2123 அகந்தையாயிராதே (3:16, 9:10)

2124 கோடாரியாகிய நீ, உன்னைக் கொண்டு வெட்டுகிறவனுக்கு விரோதமாய் மேன்மை பாராட்டாதே (10:5)

2125 வாளாகிய நீ, உன்னைக் கொண்டு வெட்டுகிறவனுக்கு விரோதமாய் மேன்மை பாராட்டாதே (10:15)

2126 இஸ்ரவேலின் பரிசுத்தருக்கு விரோதமாய் உன் கண்களை மேட்டிமையாய் ஏறெடுக்காதே (37:23)

2127 செருக்குடையவனாயிராதே (47:1)

2128 "நான்தான், என்னைத் தவிர ஒருவருமில்லை" என்று உன் இருதயத்தில் எண்ணாதே (47:10)

2129 நீ தாழ்த்தப்படாதிருக்க, மேட்டிமையான கண்களைத் தாழ்த்து (2:11,17, 5:15, 10:33)

2130 நியாயம், நீதி செய்; கொடுமை செய்யாதே (5:7)

2131 நீ மட்டும் வாசமாயிருக்கும்படி மற்றவர்களுக்கு இடமில்லாமற் போகப் பண்ணாதே (5:8)

2132 சாராயத்தை நாடாதே (5:11); குடிக்காதே (5:22)

2133 தீமையை நன்மையென்றும், நன்மையைத் தீமையென்றும் சொல்லாதே (5:20)

2134 இருளை வெளிச்சமும் வெளிச்சத்தை இருளுமாகப் பாவியாதே (5:20)

2135 கசப்பைத் தித்திப்பென்றும், தித்திப்பைக் கசப்புமென்றும் சாதிக்காதே (5:20)

2136 பரிதானத்திற்காக குற்றவாளியை நீதிமானாகத் தீர்க்காதே (5:23)

2137 நீதிமானின் நியாயத்தை அவனுக்கு விரோதமாகப் புரட்டாதே (5:23)

2138 ஏழைகளை வழக்கிலே தோற்கப் பண்ணாதே (10:1)

2139 சிறுமையானவர்களின் நியாயத்தைப் புரட்டாதே (10:1)

2140 விதவைகளைச் சூறையாடாதே (10:1)

2141 திக்கற்ற பிள்ளைகளைக் கொள்ளையிடாதே (10:1)

2142 அநியாயமான தீர்ப்புகளைச் செய்யாதே (10:2)

2143 கொடுமையான கட்டளைகளை எழுதாதே (10:2)

2144 கண்கண்டபடி நியாயந்தீர்க்காதே; காது கேட்டபடி தீர்ப்புச் செய்யாதே (11:3)

2145 நீதியின்படி ஏழைகளை நியாயம் விசாரி (11:4)

2146 யதார்த்தத்தின்படி சிறுமையானவர்களுக்குத் தீர்ப்புச் செய் (11:4)

2147 தீமை செய்யாதே; உன் சந்ததி ஒருபோதும் பேர்பெறுவதில்லை (14:20)

2148 அநியாயஞ் செய்யாதே (26:10)

2149 நியாய வாசலில் உன்னைக் கடிந்து கொண்டவனுக்கு கண்ணி வையாதே (29:21)

2150 அக்கிரமஞ் செய்ய வகை தேடாதே (29:21)

## ஜெபியரங்கள்

| ஏப்ரல் | | | |
|---|---|---|---|
| 1 | இயேசுவோடு இனிய வாலிபர் மாலை | சாத்தூர் | மாலை 4 - 6 |
| 2 | லெந்துகால சிறப்புக் கூட்டம் | பரி. ஸ்தேவான் ஆலயம் CSI ஏழாயிரம்பண்ணை | |
| 2 | அற்புதத்தின் மாலை | ஆலங்குளம் | மாலை 7 - 9 |
| 3,4 | லெந்துகால சிறப்பு கூட்டம் | பரி. மிகாவேல் ஆலயம் CSI போல்பேட்டை, தூத்துக்குடி | |
| 4 | முழுஇரவு ஜெபம் | தேவனுடைய கூடாரம், ஏழாயிரம்பண்ணை | |
| 5 | அற்பதத்தின் மாலை | பாளையங்கோட்டை மாலை 6.30 - 8.30 | |
| 6,7,8 | நற்செய்தி கூட்டம் | AG Church, இடையர்பாளையம், கோவை | |
| 7 | அற்புத உபவாச ஜெபம் | ஸ்ரீவைகுண்டம் காலை 10 - 2 | |
| 8 | வியாபாரிகள் சிறப்பு கூடுகை | முருகன் கலையரங்கம், உடுமலைபேட்டை | |
| 8 | இயேசுவோடு இனிய வாலிபர் மாலை | தூத்துக்குடி | மாலை 4 - 6 |

வாலிபர் பக்கம்

# நீ மாதிரியாயிரு

## *Be an example of the believers in Spirit*

*சகோ. S. ஜெபராஜ்* President, Grace Ministries

கர்த்தருக்கு அன்பான சகோதர சகோதரிகளுக்கு இன்ப இயேசுவின் இனிய நாமத்தில் வாழ்த்துக்கள். நாம் நடக்கையிலும், அன்பிலும் மாதிரியாய் இருப்பது குறித்து கடந்த இதழ்களில் கற்றுக்கொண்டோம். இப்பொழுது ஆவியில் விசுவாசிகளுக்கு மாதிரியாயிருப்பது குறித்து அறிந்து கொள்ளுவோம். வேத புத்தகத்தில் அநேகவிதமான ஆவிகளைக் குறித்து வாசிக்கிறோம். **கிறிஸ்துவின் ஆவி** இல்லாதவன் அவருடையவன் அல்ல. (ரோமர் 8:9) இயேசுகிறிஸ்துவை அறிக்கை பண்ணாத **அந்திக்கிறிஸ்துவின்** ஆவி (1யோ. 4:3). இப்பொழுதும் உலகத்தில் இருக்கிறது. **மனுஷருக்குரிய ஆவி**யினால் மனுஷர்களை அறிவான். தேவனுக்கேற்கும் பலிகள் **நொறுங்குண்ட ஆவிதான்** (சங். 51:17). உலகம் அந்த சத்திய ஆவியானவரை காணாமலும் அறியாமலும் இருக்கிறது (யோ. 14:17). தேவன் நமக்கு **பயமுள்ள ஆவி**யைக் கொடாமல் பலமும், அன்பும் **தெளிந்த புத்தியுமுள்ள** ஆவியையே கொடுத்திருக்கிறார். இன்னும் எரிச்சலின் ஆவி, கன நித்திரையின் ஆவி, அசுத்த ஆவி, பொல்லாத ஆவி இவைகளைக் குறித்தும் வேதாகமத்தில் வாசிக்கிறோம். இளைஞனாகிய தீமோத்தேயுவிற்கு அப்போஸ்தலராகிய பரிசுத்த பவுல் கொடுக்கிற சிறப்பான இன்னுமொரு ஆலோசனை உன் இளமையைக் குறித்து ஒருவனும் உன்னை அசட்டைப் பண்ணாதபடிக்கு நீ ஆவியில் விசுவாசிகளுக்கு மாதிரியாயிரு.

பழைய ஏற்பாட்டின் காலத்தில் பெசலெயேல், பிலேயாம், ஒத்னியேல், கிதியோன், யெப்தா, சிம்சோன், சவுல், தாவீது, சகரியா போன்றவர்கள் மீது கர்த்தரின் ஆவி இறங்குவார். தீர்க்கதரிசனங்களை வெளிப்படுத்துவார், வல்லமையான காரியங்களை நடப்பிப்பார். அச்செயல்பாடுகள் முடிந்தவுடன் அவர்களை விட்டு போய்விடுவார். ஆனால் இயேசுவானவர் இந்த உலகத்தில் தம்முடைய ஊழியத்தை நிறைவேற்றிச் செல்லும்பொழுது சீஷர்களைப் பார்த்து சொன்னார். "நான் பிதாவை வேண்டிக் கொள்ளுவேன், அப்பொழுது என்றென்றைக்கும் உங்களுடனே கூட இருக்கும்படிக்கு சத்திய ஆவியாகிய வேறொரு தேற்றரவாளனை அவர் உங்களுக்குத் தந்தருளுவார். அவர் உங்களுடனே வாசம்பண்ணி உங்களுக்குள்ளே இருப்பதால் நீங்கள் அவரை அறிவீர்கள் (யோவா. 14:16,17). இயேசு கிறிஸ்துவின் கிருபையினால் பாவமன்னிப்பாகிய இரட்சிப்பை பெற்று தேவஒத்தாசையால் பாவங்களை விட்டுவிட தீர்மானித்துக் கொண்ட ஒவ்வொரு இருதயத்திலும் தேவ ஆவியானவர் வாசம்பண்ண விரும்புகிறார். சத்திய ஆவியாகிய அவர் வரும்போது சகல சத்தியத்திற்குள்ளும் உங்களை நடத்துவார். (யோவா. 16:13) ஆவியில் நீங்கள் மாதிரியாயிருக்கும்போது தேவன் உங்களுக்கு அருளுகிற மூன்று சிறப்பான ஆசீர்வாதங்களை கவனியுங்கள்.

### 1. பாவத்திற்கு விலகி ஓடுவீர்கள்

எகிப்தின் ராஜாவாகிய பார்வோன் யோசேப்பு என்னும் வாலிபனைக் குறித்து சான்று பகருகின்றார். தேவ ஆவியைப் பெற்ற இந்த மனுஷனைப் போல வேறொருவன் உண்டோ? உன்னைப் போல விவேகமும் ஞானமுள்ளவன் வேறொருவனுமில்லை (ஆதி. 41:38,39)



யோசேப்பு தேவ ஆவியின் நிறைவுள்ள முன்மாதிரியானவராக இருந்தபடியால், நான் தேவனுக்கு விரோதமாய் பாவம் செய்வது எப்படி? என கேள்வி எழுப்பி பாவத்திற்கு விலகி ஓடுகின்றார். ஆனால் தவறு செய்யாத நிலையில் காரணமின்றி சிறைச்சாலையில் அடைக்கப்படும்பொழுதும் கர்த்தர் யோசேப்போடே இருந்தபடியால் அவன் எதைச் செய்தானோ, அதைக் கர்த்தர் வாய்க்கப் பண்ணினார் (ஆதி. 39:23). தேவஆவியினால் ஆளப்படுகிற மனிதனுடைய வாழ்க்கை வெற்றியுள்ள முன்மாதிரியான வாழ்க்கையாகவே இருக்கும் என்பது நிச்சயம். அன்பான வாலிப தம்பி, தங்கை உனக்குள்ளே தேவஆவியானவர் வாசம் செய்ய நீ விட்டுக்கொடுக்கும்பொழுது நீ பாவத்திற்கு விலகி ஓடி பரிசுத்தமாய் வாழமுடியும். உன்னில் வாசமாயிருக்கிற தேவஆவியை மற்றவர்கள் கண்டுகொள்ள முடியும். தேவனுடைய ஆவி உங்களில் வாசமாயிருந்தால் நீங்கள் மாம்சத்துக்குட்பட்டவர்களாயிராமல் ஆவிக்குட்பட்டவர்களாயிருப்பீர்கள். கிறிஸ்துவின் அவி இல்லாதவன் அவருடையவனல்ல (ரோமர் 8:9). தேவனுடைய ஆவியினால் கழுவப்பட்டீர்கள், பரிசுத்தமாக்கப்பட்டீர்கள், நீதிமான்களாக்கப்பட்டீர்கள் (1கொரி. 6:11). உங்கள் சரீரங்கள் கிறிஸ்துவின் அவயவங்கள் என்பதை மறந்து போக வேண்டாம். கர்த்தரோடிசைந்திருக்கிறவன் அவருடனே ஒரே ஆவியாயிருக்கிறான் (1கொரி. 6:17)

### 2. கிறிஸ்துவை அறிக்கை செய்வீர்கள்

உங்களுக்குள் தேவ ஆவியானவர் வாசம்பண்ணுவதை நீங்கள் எதினாலே அறியமுடியும்? இயசேுகிறிஸ்துவை அறிக்கை பண்ணுகிற எந்த ஆவியும் தேவனால் உண்டாயிருக்கிறது (1யோவா. 4:2). நீங்கள் கிறிஸ்துவை மற்றவர்கள் முன்பாக அறிக்கையிட வெட்கப்படக்கூடாது. இயேசுவானவர் ஒருநாள் ஜெப ஆலயத்தில் பிரவேசித்து ஏசாயா தீர்க்கதரிசியின் புத்தகத்தை வாசித்தார். கர்த்தருடைய ஆவியானவர் என் மேலிருக்கிறார், தரித்திரருக்கு சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும்படி என்னை அபிஷேகம் பண்ணினார். சிறைப்பட்டவர்களுக்கு விடுதலையை பிரசித்தப் படுத்தவும் என்னை அனுப்பினார் என்பதாக அறிக்கை செய்கிறார் (லூக். 4:18,19) இயேசுவை கிறிஸ்து என்று அறிக்கை செய்யுங்கள். நாவு யாவும் தேவனை அறிக்கை பண்ணும் (ரோமர் 14:11). பரிசுத்த ஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பெலனடைந்து பூமியின் கடைசி பரியந்தம் தேவனுக்கு சாட்சிகளாயிருப்பீர்கள். (அப். 1:8)

### 3. பராக்கிரமம் செய்வீர்கள்

மீகா தீர்க்கதரிசி கூறுகிறார். கர்த்தருடைய ஆவி அருளிய பராக்கிரமத்தினால் நிரப்பப்பட்டிருக்கிறேன். (மீகா 3:8). தேவனுடைய ஆவியினால் நிரப்பப்பட்டிருக்கிறவர்கள் பராக்கிரமம் செய்வார்கள். கர்த்தருடைய தூதனானவர் கிதியோனுக்கு தரிசனமாகி பராக்கிரமசாலியே கர்த்தர் உன்னோடே இருக்கிறார் என்றார். (நியா. 6:12) அன்று ராத்திரியிலே கிதியோன் பாகாலின் பலிபீடத்தை தகர்த்து அதின் அருகேயிருக்கிற தோப்பை வெட்டிப் போட்டான் (நியா. 6:25). கர்த்தருடைய பட்டயம் கிதியோனுடைய பட்டயமாய் மாறிற்று (நியா. 7:20). கிதியோன் இஸ்ரவேல் ஜனங்களை மீதியானியர் கைக்கு விலக்கி இரட்சித்தான். மீதியானியர் தாழ்த்தப்பட்டார்கள். தேசமானது கிதியோனின் நாட்களில் 40 வருஷம் அமைதலாயிற்று (நியா. 8:28) அன்பானவர்களே! உங்களையும் தேவன் தம்முடைய ஆவியினால் நிரப்பும்பொழுது நீங்களும் பராக்கிரமசாலிகளாய் மாறுவீர்கள். கர்த்தருக்காய் எழும்பி நின்று பராக்கிரமமான காரியங்களை நிறைவேற்றுவீர்கள்.

அவர்கள் யுத்தத்திலே தங்கள் சத்துருக்களை வீதிகளின் சேற்றில் மிதிக்கிற பராக்கிரமசாலிகளைப் போலிருந்து யுத்தம் பண்ணுவார்கள். கர்த்தர் அவர்களோடே கூட இருப்பார் என்பது சகரியாவின் தீர்க்கதரிசனம் (சகரி. 10:5). நீங்கள் உலகம், மாமிசம், பிசாசு யாவையும் ஜெயித்து வெற்றியுள்ள முன்மாதிரியான வாழ்க்கை வாழ தேவன் உங்களுக்கு கிருபை செய்வார்.

## புதுச்சேரியில் வீசியது தானே புயல்

(தினமலர் 02-01-2012)

பாதுகாத்து பண்படுத்தியது போனஇடம் தெரியவில்லை தானே
ஆதாரமோ ஒன்றுமில்லை அனுதாபத்திற்கோ பஞ்சமில்லை தானே
இருப்பவனும் வீதியிலே! இல்லாதவனும் வீதியிலே! தானே
முள்குத்தினால் வேதனையோ கொஞ்சநேரம்
மூலமே குத்தப்பட்டால் என்னவென்பது?
எல்லோரும் கேட்கும் ஒரு கேள்வி இது ஏன்?
மீன்கள் துடிப்பதை அழகு பார்க்கும் தெய்வமோ?
வாருங்கள் .... வழக்காடுவோம் வாருங்கள் என்று.... தானே
வருகிறார் ... அழைக்கிறார் – தேவனே – வருகிறார் ... அழைக்கிறார்
வருகிறீர்களா?....! வழக்காடுவோமா?...!
கேட்கிறார் அழியாத நித்தியத்துக்குதானே உனை படைத்தேன்!
நீ என்ன செய்து கொண்டிருக்கிறாய்?
பொருள் வாங்க கடைக்கு அனுப்பினேன்!
நீயோ பொருளோடு சங்கமாகிவிட்டாய் தானே
உனக்கென்று வாசஸ்தலம் நான் அமைக்க...
நீயோ... காற்றை கல்லாக்கி கட்டிடம் கட்டுகிறாயே
சிந்தி – உனைக் அழிக்க யாரால் முடியும்!
உன் ஆத்துமாவை 'கொல்ல' யாரால் முடியும்!
உலகில் நிகழும் மரணம் மரணமல்ல,
ஆத்துமாவின் மரணமே நிஜ மரணம்!
சகோதரனே இதை அறிய ஞானமில்லை என்கிறாயோ!
கர்த்தருக்குக்கீழ் படிவதே ஞானத்தின் ஆரம்பம்!
நம்முடைய குடியிருப்போ பரலோகத்தில் இருக்கிறது.

**Er. A. ஜெயபால்** Tuticorin.

நன்றி கூறுகிறோம்...

கடந்த ஆண்டு 500 வேதாகமத்திற்கு ரூ. 100 வீதம் தாங்க கேட்டிருந்தோம். 570 வேதாகமங்களை வாங்கி கொடுத்தீர்கள். தேவன் உங்களை ஆசீர்வதிப்பார். இந்த ஆண்டு நமக்கு தேவை 750 வேதாகமங்கள் ஒரு குடும்பத்தினர் கேட்கும் முன்னரே 100 வேதாகமங்களுக்கு காணிக்கை அனுப்பிவிட்டார்கள். மற்றொமொரு வாலிப சகோதரர் 20 வேதாகமங்களுக்கு காணிக்கை அனுப்பியுள்ளார்கள். இன்னும் நமது தேவை 630 வேதாகமங்கள் தாங்க முன் வாருங்கள்.



# "குறிக்கோள்"

Dr. P. செல்வராஜ், கோவை

"உங்களில் ஒருவன் ஒரு கோபுரத்தைக் கட்ட மனதாயிருந்து, அஸ்திபாரம் போட்ட பின்பு முடிக்கத் திராணியில்லாமற் போனால், பார்க்கிறவர்களெல்லாரும் : .... தன்னைப் பரியாசம் பண்ணாதபடிக்கு, அதைக் கட்டித் தீர்க்கிறதற்குத் தனக்கு நிர்வாகமுண்டோ இல்லையோ என்று முன்பு அவன் உட்கார்ந்து செல்லுஞ்செலவைக் கணக்குப் பாராமலிருப்பானோ?" (லூக்கா 14:28-30)

"But don't begin until you count the cost. For who would begin construction of a building without first getting estimates and then checking to see if he has enough money to pay the bills? Otherwise he might complete only the foundation before running out of funds. And then how everyone would laugh!" (Luke 14:28,29)

சீடத்துவத்திற்காகும் செலவை விளக்குவதற்கு இயேசு இரண்டு உவமைகளைப் பயன்படுத்துகிறார் (லூக்கா 14:25-33). அவற்றில் ஒன்று மேலே குறிப்பிடப்பட்டுள்ள வசனங்களில் இடம் பெற்றிருக்கிறது. இலக்கு அல்லது குறிக்கோள் அருட்பணியின் பின்னணியில் கண்டிப்பாக இருக்க வேண்டும். உலக வாழ்க்கையில் நல்லதோர் சாதனை படைக்க வேண்டுமென்றாலும் குறிக்கோள் – இலக்கு – திட்டமிடல் தேவை

| | | |
|---|---|---|
| வால்ட் டிஸ்னி | : | என்னுடைய 'மிஷன்' மக்களை மகிழ்விப்பது |
| ஃபில் நைட் | : | என்னுடை 'மிஷன்' எல்லா விளையாட்டு வீரர்களுக்கும் தேவையான ஊக்குவிப்பையும், யுக்தியையும் அளிப்பது. |
| எரிக் ஷ்மிட் | : | என்னுடைய 'மிஷன்' உலகத்திலுள்ள தகவல்கள் அனைத்தையும் திரட்டி அவற்றை எல்லோருக்கும் கிடைக்கச் செய்வது. |
| பி.ஜே. மார்ஷல் | : | உங்கள் குறிக்கோள் வெறுமையாக இருந்தால் அதைத்தான் நீங்கள் ஒவ்வொரு தடவையும் பெறுவீர்கள். |
| ஜிம் ஜாண் | : | பெரும்பாலும் உங்கள் நேரத்தை செலவிடும் ஐந்து நபர்களின் சராசரியாகத்தான் நீங்கள் இருப்பீர்கள். |
| நீதிமொழிகள் (13:20) | : | ஞானிகளோடே சஞ்சரிக்கிறவன் ஞானமடைவான்; மூடருக்குத் தோழனோ நாசமடைவான் |
| ரிச்சர் மாஹ் | : | உலகில் உங்கள் 'மிஷன்' நிறைவடைந்துவிட்டதா என்பதை எவ்வாறு அறிவீர்கள் : நீங்கள் உயிரோடிருந்தால் நிறைவடையவில்லையென்று பொருள். |

எதிர்காலத்தைக் குறித்த உங்கள் கனவு என்ன? அந்தக் கனவு நிறைவேற நீங்கள் எதை விதைக்கப்போகிறீர்கள்?

உங்கள் நேரத்தையா? உங்கள் பணத்தையா? உங்கள் திறமையையா?

விதைக்கப்படாமல் எந்தக் கனவும் நனவாவதில்லை. எனவே கனவு காணுங்கள். அது நிறைவேற "விதையுங்கள்"

"என் ஆத்துமாவே, தேவனையே நோக்கி அமர்ந்திரு; நான் **நம்புகிறது** அவராலே **வரும்"** (சங்கீதம் 62:5)

"அது உங்கள் வேண்டுதலினாலும் இயேசு கிறிஸ்துவினுடைய ஆவியின்

உதவியினாலும் எனக்கு இரட்சிப்பாக முடியுமென்று **அறிவேன்.** நான் ஒன்றிலும் வெட்கப் பட்டுப் போகாமல், எப்பொழுதும் போல இப்பொழுதும், மிகுந்த தைரியத்தோடே ஜீவனாலாகிலும், சாவினாலாகிலும், கிறிஸ்து என் சரீரத்தினாலே மகிமைப்படுவாரென்று எனக்கு உண்டாயிருக்கிற வாஞ்சைக்கும் நம்பிக்கைக்கும் **தக்கதாய்,** அப்படி **முடியும்"** (பிலிப்பியர் 1:19-20). பவுலடிகளாரின் உறுதியான எதிர்பார்ப்பைப் பாருங்கள்.

ஆம், உங்கள் இலக்கை நீங்கள் அடைய தேவன் உதவுவார்! உங்கள் நம்பிக்கைக்கும் வாஞ்சைக்கும் ஏற்ற பலனை நீங்கள் காண்பீர்கள்!! நீங்கள் ஒன்றிலும் வெட்கப்பட்டுபோவதில்லை!!!

தோல்வியைக் கொண்டு வரும் எதிர்மறையான எண்ணங்களோ, சொற்களோ வேண்டாம். பிறருடைய எதிர்மறையான மதிப்பீடுகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து உங்கள் குறிக்கோளை இழந்து விடாதீர்கள்.

"நீர் ஒரு காரியத்தை **நிருணயம் பண்ணினால்,** அது உமக்கு **நிலைவரப்படும்"** (யோபு 22:28)

## *பணித்தளங்களில் – தேவனைத் துதிப்போம்!*

### திருநெல்வேலி மாவட்டம்

பணித்தளம் : **அத்தியூத்து** **மார்ச் 1**

ஜனவரி 28, 29 ஆகிய நாட்களில் சமத்துவபுரம் நற்செய்தி கூட்டத்தை எதிர்ப்புகளை மாற்றி சிறப்பாய் நடத்த கர்த்தர் கிருபை செய்தபடியால் கர்த்தரைத் துதிப்போம்.

பணித்தளம் : **மேலச்செவல்**

இங்கு ஊழியம் செய்கிறதான ஊழியர்களாகிய நாங்கள் ஊழியத்திலிருந்து வேறு வேலைக்குச் சென்றிருந்தோம். தற்போது தேவகிருபையால் ஊழியத்தில் இணைந்து ஊழியம் செய்ய வைத்ததற்காக... சகோதரி. சிவபாக்கியம் அவர்களுக்கு மிகவும் பெலவீனத்தில் சோர்ந்துபோய் இருந்தார்கள். ஜெபித்தோம் தேவன் விடுதலை கொடுத்ததற்காக...

சகோதரி வள்ளி தேவயாணிக்கு கால்வலியிலிருந்து பரிபூரண சுகம் கொடுத்ததற்காக... சகோதரி. பியூலாவிற்கு வீடுகட்ட பணத்தேவைகளை தேவன் சந்தித்ததற்காக...

சகோதரி. சுவிட்டிக்கு நல்ல வேலை கிடைத்ததற்காக...

பணித்தளம் : **வடமலாபுரம்**

சகோ. போவாஸ் இவர்கள் வேலையை தேவன் விரிவுபடுத்த கிருபை செய்ததற்காக... சகோதரி. பாக்கியத்தாய் இவர்கள் திருமணத் தடை நீங்கி திருமணம் நடந்ததற்காக... சகோதரி. தேவி டீச்சர் வீட்டில் 7 வாரங்கள் நடைபெற்ற உபவாசக் கூடுகைக்காக.... சகோ. ஆனந்த்க்கு நல்ல வேலை கிடைத்ததற்காக... சகோ. மனோ சாந்தம் செய்துவரும் ஊழியங்களை தேவன் விரிவு படுத்தி, ஆசீர்வதித்துவருகிறதற்காக...

### தூத்துக்குடி மாவட்டம்

பணித்தளம் : **ஆண்டாள்நகர்**

முதியோர் இல்லத்தில் இருந்து வரும் சகோ. ஜெகஜோதி அவர்கள் நமது ஆலயத்திற்கு சீலிங்ஃபேன் வாங்கி கொடுத்ததற்காக....



திம்மராஜபுரத்தில் உள்ள சி.எஸ்.ஐ. பள்ளியில் மாணவ கூடுகை நடத்த தேவன் கிருபை தந்ததற்காக...

பணித்தளம் : **ஸ்ரீமூலக்கரை**

திருப்புளியங்குடி இங்கு ஊழியத்தையும் ஜெபவீட்டையும் நன்மைகளால் நடத்திவந்தார். ஜெபவீடு கட்டுமான பணியிலும் தேவைகளை சந்தித்ததற்காக... இன்னும் கான்கிரீட் போட ரூ. 1 லட்சம் தேவையை சந்தித்துத் தரப்போகிறதற்காக... சகோ. துரைக்கு ஏற்ற துணையை தந்ததற்காக... சகோ. மனோகரன் இவர்கள் படித்தவுடனே வேலை கிடைக்கச் செய்ததற்காக... திருமண காரியம் ஒழுங்கானதற்காக...

பணித்தளம் : **பண்ணைவிளை**

எஞ்சினியரிங் கல்லூரி விடுதியில் இருக்கும் கீதாவிற்கு கல்லூரி வளாகத்தில் நடந்த நேர்க்காணலில் வேலை கிடைத்ததற்காக... சகோதரி. கவிதாவிற்கு தேவன் ஆறுதலைக் கொடுத்ததற்காக... மேரி என்ற சகோதரிக்கு தேவன் வேலைக்கு வழி திறந்ததற்காக... சகோதரி. ஹேனாவுக்குக் கர்த்தர் குழந்தை பாக்கியம் கொடுத்தற்காக... சகோதரி. கிளாரியா அவர்கள் இல்லத்தில் ஜெபிக்க இடம் கிடைத்ததற்காக....

பணித்தளம் : **தாதன்குளம்**

சகோதரி முகிலா இரட்சிக்கப்பட்டதற்காக... தேவன் கொடுத்த விடுதலைக்காக... சகோதரி. மகேஷ்க்கு சுகப்பிரவசத்தை கட்டளையிட்டு ஒரு ஆண்குழந்தையை தந்ததற்காக...

பணித்தளம்: **பேட்மாநகரம்**

சகோதரி. முத்துலட்சுமியினுடைய திருமண காரியத்திற்கான பணத்தேவைகளை தேவன் சந்தித்தற்காக... சகோ. தர்மராஜ அவர்களுக்கு வயிற்றில் நடைபெற்ற ஆப்ரேஷனில் தேவகரம் கூட இருந்து கிடைத்த நற்சுகத்திற்காக... சகோ. ஹெரால்டு விக்டர் அவர்களுக்கு தேவன் ஆயுசு நாட்களை கூட்டி கொடுத்ததற்காக... இங்கு ஊழியர் திருமதி. சாந்தி ராஜசேகர் முதுகு வலியிலிருந்தும் இளைப்பு வியாதியிலிருந்தும் விடுதலை கொடுத்ததற்காக... டேனியேலுக்கு இளைப்பு வியாதிலிருந்து தேவன் கொடுத்த விடுதலைக்காக.... சகோதரி. ஜெயமணிக்கு ஆப்ரேஷன் இல்லாமல் விடுதலை தந்ததற்காக...

### விருதுநகர்மாவட்டம்

பணித்தளம் : **முக்கூட்டுமலை**

சகோ. மணிமாறன் இருதயத்தில் சிறுதுளை இருந்தது. நாம் ஜெபித்தோம். கர்த்தர் அற்புதம் செய்தார். இப்போது துளை இல்லை என்று டாக்டர் சொல்லி விட்டார்கள். கர்த்தருக்கு ஸ்தோத்திரம்

பணித்தளம் : **பண்டுதன்பட்டி**

சகோ முருகனுக்கு தலைவலியிலிருந்து கர்த்தர் பூரண சுகம் கொடுத்ததற்காக... சகோதரி. மரியாள் வாகன விபத்தில் சிறிய காயங்களுடன் உயிர்தப்ப வைத்ததற்காக... சகோதரி வனிதாவிற்கு சுகப்பிரசவத்தில் பெண் குழந்தையைக் கொடுத்ததற்காக....

பணித்தளம் : **ஜமீன்சல்வார்பட்டி**

வேண்டிபெருமாள் பிசாசு பிடியிலிருந்து விடுதலை அடைந்ததற்கு சரீர சுகவீனம் சுகமடைந்ததற்கு... தமயந்தி அம்மா புதிதாக ஆலயத்திற்கு வருகிறாரர்கள். அவர்கள் கால்வலி வேதனை சுகமானதற்காக... சகோதரி மாரீஸ்வரி, சகோதரி. தமயந்தி என்ற 2

புதிய ஆத்துமாக்களை கர்த்தர் சபைக்கு தந்ததற்காக...

பணித்தளம் : **புல்லலக்கோட்டை**

சகோ. விசுவாசம் அவர்கள் மகன் மூக்கில் சதை வளர்ந்திருக்கிறது. ஆப்பரேஷன் பண்ண வேண்டுமென்று சொன்னார்கள் நாம் ஜெபித்தோம். கட்டி மறைந்து போனது ஆண்டவர் நமது ஊழியருக்கு ஒரு மோட்டார் சைக்கிள் கொடுத்ததற்காக... 27-2-2012ல் நடைபெற்ற 11ம் ஆண்டு பிரதிஷ்டைக்காக 26-2-2012ல் நடைபெற்ற குடும்ப முகாமிற்காக... கோட்டை பட்டியில் 7.2 சென்ட் இடத்தை தேவன் திருமதி. பேரா. கலாநிதி பிரேமா அவர்கள் மூலம் காணிக்கையாக தேவன் தந்தமைக்காக

**மதுரை மாவட்டம்**

பணித்தளம் : **திரளி**

திரளி கிராமத்தில் கட்டப்பட்டுள்ள புது ஆலயத்திற்காக... சகோதரி. மனுஷாதேவிக்கு கர்த்தர் ஜெபத்தைக் கேட்டு சுகப்பிரசவத்தில் நல்ல ஒரு ஆண்குழந்தையைக் கொடுத்ததற்காக... சகோதரி. பஞ்சம்மாள் மருமகனுக்கு சுயநினைவு வந்து பேசுவதற்கு ஜெபித்தோம். பேசும்படி கிருபை செய்ததற்காக...

**திருப்பூர் மாவட்டம்**

பணித்தளம் : **பொங்கலூர்**

தொட்டிபாளையத்தில் 8 பேர் ஞானஸ்நான உடன்படிக்கை செய்துள்ளதற்காக.... இந்திரா காலனியில் புதிய ஜெபக்கூட்டம் ஆரம்பிக்கப்பட்டதற்காக... விசுவாச சகோதரி விஜயாவின் திருமணத்தைக் கர்த்தர் ஆசீர்வாதமாக நடத்தி தந்தமைக்காக... விசுவாசியின் வீட்டில் பாம்பு ஒன்று புகுந்தது. கர்த்தர் தனது பிள்ளைகளை பாதுகாத்ததற்காக...

**திண்டுக்கல் மாவட்டம்**

பணித்தளம் : **தொப்பம்பட்டி**

சகோ. பீமராஜா, சகோதரி பிச்சையம்மாள், சகோ. அழகு முருகன் போன்ற வாலிபர்களுக்கு இரவில் கெட்ட சொப்பனம், அலறி எழுந்திருத்தல் நிமித்தமாக இரவு முழுவதும் தூங்காமல் இருந்தனர். ஜெபத்திற்குப்பின் நன்றாக இரவு தூங்குகின்றனர். அதற்காக...

**திருச்சி மாவட்டம்**

பணித்தளம் : **மஞ்சம்பட்டி**

சகோ. குழந்தை அவர்கள் வீடு கட்டப்பட இடம் கிடைத்ததற்காக... சகோ. சாந்தகுமார் அவர்களுக்கு நல்ல வேலை கிடைத்ததற்காக... சகோ. மார்ட்டின் அவர்களுக்கு கர்த்தர் வீடுகட்ட பணஉதவி கிடைக்க செய்ததற்காக... சகோதரி. ஹெப்சி இவர்களுக்கு 4 ஆண்டுகளுக்கு பின் கர்ப்பம் அடைய செய்ததற்காக... சகோ. மேரி அவர்கள் மகன் ஆலயத்திற்கு வரச் செய்ததற்காக...

---

சிந்தனைக்கு....

- நான் கேட்பது ஆசீர்வாதம் அல்ல –
  எதிர் கேள்வி இல்லா சொல்லும் அடியேன் கீழ்ப்படிகிறேன் நான் வாழ கிருபையே
- நான் தேடுவது எனக்கு பணிந்திடும் திரள் அல்ல –
  பணி செய்து நிற்க விளைநிலமே



## பரிசுத்த உபவாச ஜெப முகாம்

இடம் : வானத்தின் வாசல் ஜெபமையம், சிவகாசி, விருதுநகர் மாவட்டம்

காலம் : **2012 ஏப்ரல் 26, 27, 28 (வியாழன், வெள்ளி, சனி)**

**ஆயத்தக்கூட்டம் 25-4-2012 புதன் இரவு 8 மணி**

**முகாம் வியாழன் 26ம் தேதி காலை 5 மணி முதல் 28ம் தேதி சனி மதியம் 1 மணிக்கு முடிவடையும்.**

**முகாமின் பதிவு கட்டணம் ரூ. 50/– மட்டும். முந்தின நாள் இரவே வந்து தங்கலாம்.**

**ஆண், பெண் தங்க தனித்தனி இடவசதி உண்டு.**

வேதாகமம், நோட்டு, பேனா, தம்ளர், உங்கள் படுக்கை வசதி கொண்டு வாருங்கள்.

**தொடர்பு : 98947 14768, 94431 69352, 94429 94126**

---

## ஆத்தும ஆதாய இளைஞர் இயக்கம்
## MECOGEN - V.B.S. - 2012 - ஜெபக்குறிப்புகள்

இவ்வூழியம் விசேஷமாக கிராம சிறுவர்களுக்காக ஆலயமில்லா கிராமங்களை மையமாக வைத்து நடத்தப்படும் ஊழியமாகும். இந்த ஆண்டு 325 கிராமங்களுக்கும் மேலாக ஒவ்வொரு கிராமங்களிலும் 6 நாட்கள் நடத்தி அதன்மூலம் 16,500 சிறுவர்களுக்குச் சுவிசேஷத்தைச் சொல்லத் திட்டமிட்டுள்ளோம்

1. வெளி 3:8இன்படி நாம் திட்டமிட்டபடி 325 கிராமங்களுக்கும் மேலாக கிராமங்களில் திறந்த வாசலை கர்த்தர் நமக்குத் தரும்படியாக...
2. சங். 49:2இன்படி சிறுபிள்ளைகள் செவிகொடுக்க...
3. மாற். 18:14இன்படி எல்லா சிறுவர்களும் இயேசுவை ஏற்றுக்கொள்ள...
4. ஏசா. 54:17இன்படி எதிர்ப்புகள் மாற...
5. தன்னார்வ ஊழியர்களைப் பயிற்றுவிக்க நடைபெறும் 2 நாட்கள் பயிற்சி வகுப்புகள் (6 இடங்களில்) தேவன் ஆசீர்வதிக்க..
6. இவ்வூழியத்திற்குத் தேவையான 400 தன்னார்வ ஊழியர்களை தேவன் எழுப்ப..
7. நமது ஊழியர்களுடன் தன்னார்வ ஊழியர்கள் கிராமங்களில் பணி செய்யும்போது சக. 9:8இன்படி தேவ பாதுகாப்பு இருக்க...
8. ஒரு சிறுபிள்ளைக்குச் சுவிசேஷம் சொல்ல ஆகும் செலவு ரூ. 50 வீதம் 16,500 பிள்ளைகளைத் தாங்கும் விசுவாச தேவ பிள்ளைகளை அனுப்பித்தர அல்லது ரூ. 2500 வீதம் கொடுத்து 1 VBS ஐ தாங்குவோரை தேவன் எழுப்ப...
9. கடந்த ஆண்டில் எதிர்ப்பினால் நடத்த முடியாமல் போன கிராமங்களில் தடைகளை மாற்றி, இந்த ஆண்டு நடத்த தேவன் கிருபை தர...

துதியுங்கள்

கடந்த ஆண்டுகளில் எபே. 3:20ன்படி தேவனின் கிரியைகள்...

1. 1997ஆம் ஆண்டில் திட்டமிட்ட VBSகள் 7 நடந்த VBS கள் 13
2. 1998ஆம் ஆண்டில் திட்டமிட்ட VBSகள் 13 நடந்த VBS கள் 15

3. 1999ஆம் ஆண்டில் திட்டமிட்ட VBSகள் 26 நடந்த VBS கள் 39
4. 2000ஆம் ஆண்டில் திட்டமிட்ட VBSகள் 40 நடந்த VBS கள் 48
5. 2001ஆம் ஆண்டில் திட்டமிட்ட VBSகள் 77 நடந்த VBS கள் 103
6. 2002ஆம் ஆண்டில் திட்டமிட்ட VBSகள் 100 நடந்த VBS கள் 119
7. 2003ஆம் ஆண்டில் திட்டமிட்ட VBSகள் 120 நடந்த VBS கள் 155
8. 2004ஆம் ஆண்டில் திட்டமிட்ட VBSகள் 150 நடந்த VBS கள் 163
9. 2005ஆம் ஆண்டில் திட்டமிட்ட VBSகள் 160 நடந்த VBS கள் 173
10. 2006ஆம் ஆண்டில் திட்டமிட்ட VBSகள் 160 நடந்த VBS கள் 208
11. 2007ஆம் ஆண்டில் திட்டமிட்ட VBSகள் 175 நடந்த VBS கள் 178
12. 2008ஆம் ஆண்டில் திட்டமிட்ட VBSகள் 175 நடந்த VBS கள் 207
13. 2009ஆம் ஆண்டில் திட்டமிட்ட VBSகள் 180 நடந்த VBS கள் 215
14. 2010ஆம் ஆண்டில் திட்டமிட்ட VBSகள் 200 நடந்த VBS கள் 262
15. 2011ஆம் ஆண்டில் திட்டமிட்ட VBSகள் 300 நடந்த VBS கள் 313
16. இந்த ஆண்டில் திட்டமிட்டுள்ள VBSகள் 325
17. இந்த ஆண்டு VBSஇன் மொத்த தேவை ரூ. 8 இலட்சத்து 12 ஆயிரத்து 500 சந்திக்கப்பட
18. நமது மிஷனெரிகளை தன்னார்வ ஊழியர்களை தேவன் வியாதி பெலவீனங்கள் தாக்காது காத்துக்கொள்ள....
19. VBS நடைபெறும் கிராமங்களில் ஆராதனைக் குழுக்கள் ஆரம்பிக்கப்பட தேவன் வாசல்களை திறக்க
20. VBS நடைபெறும் கிராமங்களில் தேவன் செழிப்பை ஆசீர்வாதத்தைக் கட்டளையிட

ஏப்ரல் **ஜெபியுங்கள்**

| | | | |
|---|---|---|---|
| 10 | அற்புதத்தின் மாலை | திருவேங்கடம் | மாலை 6 - 8 |
| 10 | அற்புத உபவாச ஜெபம் | பிரமுத்து தேவர்விளை, தூ-டி. | காலை 11 - 2 |
| 11 | முழுஇரவு ஜெபம் | தலைமை அலுவலகம், தூத்துக்குடி | |
| 14 | அற்புத உபவாச ஜெபம் | மைப்பாறை | காலை 10 -2 |
| 14 | இயேசுவோடு இனிய வாலிபர் மாலை | விருதுநகர் | மாலை 4 - 6 |
| 15 | இயேசுவோடு இனிய வாலிபர் மாலை | ஏழாயிரம் பண்ணை | மாலை 4 -6 |
| 16 | அற்புத உபவாச ஜெபம் | மாதாநகர், தூத்துக்குடி | காலை 11 - 2 |
| 17 | அற்புதத்தின் மாலை | அம்பாசமுத்திரம் | மாலை 5 -7 |
| 19 | அற்புதத்தின் மாலை | புதுக்கோட்டை | மாலை 7.15 - 9 |
| 21 | அற்புத உபவாச ஜெப நாள் | மஞ்சம்பட்டி | காலை 10 - 2 |
| 21 | இயேசுவோடு இனிய வாலிபர் மாலை | திருவேங்கடம் | மாலை 4-6 |
| 22 | இயேசுவோடு இனிய வாலிபர் மாலை | சாயர்புரம் | மாலை 4 - 6 |
| 24 | அற்புத உபவாச ஜெபம் | பிரையண்ட்நகர், தூ-டி | காலை 10 - 3 |
| 25 | திறப்பின் வாயில் ஜெபம் | ஏழாயிரம்பண்ணை | |
| 28 | இயேசுவோடு இனிய வாலிபர் மாலை | ஸ்ரீவைகுண்டம் | மாலை 4 - 6 |
| 28 | இயேசுவோடு இனிய வாலிபர் மாலை | சிவகாசி | மாலை 4 - 6 |
| 28 | இயேசுவோடு இனிய வாலிபர் மாலை | மஞ்சம்பட்டி | மாலை 4 - 6 |



# தேர்வுக்குப் பின்...

பா. பொற்செல்வன் ஆசீர்

1. உங்கள் எதிர்காலம் கர்த்தரின் கரத்தில் உள்ளது என்ற உண்மையை மறவாது ஜெபியுங்கள். சங்கீதம் 33:22
2. உங்கள் மதிப்பெண் கர்த்தரின் கரத்தில் உள்ளது. நீங்கள் பெறும் மதிப்பெண்கள் உங்கள் எதிர்காலம் என நினையாதிருங்கள். கர்த்தரே உங்கள் எதிர்காலமும் அதன் நம்பிக்கையும் ஆதாரமுமாம்
3. உங்கள் மதிப்பெண்களை தன் கரத்தில் வைத்திருக்கும் கர்த்தரே உங்கள் எதிர்கால மேன்மையையும் தன் கரத்தில் வைத்திருக்கிறார் என்பதை விசுவாசித்து அறிக்கையிடுங்கள். எரே. 29:11.
4. தேர்வு முடியும் வரை ஜெபிக்கும் அநேகர் தேர்வு முடிந்தபின் தங்கள் தேவனை தேடுவதை விட்டுவிடுவார்கள். சீரான ஜெபவாழ்வை ஆவிக்குரிய வாழ்வை காத்துக் கொள்ளுங்கள். தானியேல் 6:10
5. நீங்கள் ஆண்டு முழுவதும் படித்து 3 அல்லது 2 மணி நேரம் எழுதிய தேர்வுகளை அதிகபட்சம் 5-7 நிமிடங்களில் திருத்தி மதிப்பிடப் போகிறார்கள். எனவே சரியான மதிப்பீடு பெற வேண்டும் நீங்கள் பெற வேண்டிய எந்த ஒரு மதிப்பெண்ணையும் நீங்கள் இழந்தும் விடக்கூடாது. எனவே திருத்துவோருக்காக ஜெபியுங்கள். சங். 34:4
6. நீங்கள் பெற்ற மதிப்பெண்கள் பதிவேடுகளில் பதிவு பெறும்போது எந்த தவறுகளும் நிகழக்கூடாது அதற்காக ஊக்கமாக ஜெபியுங்கள். சங். 33:9
7. தேர்வு முடிந்தபின் மேற்படிப்பிற்கு உள்ள வாய்ப்புகளை தேடி கண்டுபிடியுங்கள். நீங்கள் அறிந்திராத புதிய மேற்படிப்பு வாய்ப்புகளை பற்றி அறிய விரும்புங்கள். சங். 31:19
8. உங்கள் எதிர்காலம், மேற்படிப்பு பற்றிய தேவ திட்டம் குறித்து தெளிவைப்பெற தேவனிடத்தில் ஊக்கமாக ஜெபியுங்கள். சங். 32:8
9. விடுமுறை நாட்கள் சும்மா சோம்பி இருக்கும் நாட்கள் என நினையாது தேவன் தர இருக்கும் மேன்மைக்கு நாம் ஆயத்தப்படும் வாய்ப்பு என நம்பி உங்களை ஆயத்தப்படுத்துங்கள். சங். 34:5
10. விடுமுறை நாட்களில் தேவனோடு உங்கள் உறவை மேம்படுத்துங்கள். சங். 26:8

குறிப்பு : இந்தப் பகுதியை இனைத்து கொடுக்கப்பட்டுள்ள வசனத்தோடு இணைத்து திறந்த வேதத்தோடு வாசியுங்கள்.

## *மேல் படிப்பிற்கு புது வழிகள் சில...*

- Indian Institute of Sience Education and Research போபால் கொல்கத்தா, மொஹாலி, புனே, திருவனந்தபுரம் ஆகிய இடங்களில் உள்ளது.

- +2 முடித்த மாணவ, மாணவியர்களுக்கு 5 ஆண்டு அறிவியல் கல்வி, உதவித்தொகை உண்டு. central Human Resource Development Dept. கட்டுப்பாட்டில் உள்ள கல்வி நிறுவனங்கள் இவைகள்
  **website : www.iiser-admissions.in**
- இந்தியாவில் 43 மத்திய பல்கலைக் கழகங்கள் உண்டு. தமிழகத்தில் திருவாரூரில் மத்திய பல்கலைக்கழகம் உள்ளது. +2 படித்த எந்தப் பாடப்பிரிவு கற்றவரும் இணைந்து படிக்க வாய்ப்பு உள்ளது. இதற்கு நுழைவு தேர்வு உண்டு Central University Common Entrance Test - CUCET எழுத வேண்டும்.
  **website hitp://cutn.ac.in**
- Marine Engineering and Research Institute - Calcutta, +2 மாணவர்களுக்கு வாய்ப்பு **website www.merical.ac.in**
- Forest Research Institute - டேராடூன், இளமறிவியல் கற்ற மாணவர்களுக்கு வாய்ப்பு **website www.icfre.gov.in**
- National Sugar Institute - கான்பூர், இளமறிவியல் கற்ற மாணவர்களுக்கு வாய்ப்பு **website http://nsi.gov.in**

## செய்திகள்

- வாய் பேசமுடியாதவர்கள் பயன்படுத்தும் சைகை மொழியில் இருவகை உண்டு. 1. பிரிட்டீஷ் சைகை மொழி 2. அமெரிக்க சைகை மொழி ஆகும்.
- கண் பார்வையற்றவர்கள் பயன்படுத்தும் பிரெய்லி மொழியில் புள்ளிகள் 63 ஒலி வடிவங்களில் அமைக்கப்படுகிறது. உலகின் எந்த மொழியில் ஆனாலும் அதே 63 ஒலி வடிவங்கள் தான். எந்த மொழியில் எழுதினாலும் எந்த மொழியினரும் அதை தடவிப்படித்து கொள்ளலாம். ஆனால் மொழி தெரிந்தால் தான் அதன் அர்த்தத்தைப் புரிந்து கொள்ள முடியும்.
- உலகில் 40 மில்லியன் (4 கோடி) பார்வையற்றோர்கள் வாழ்கிறார்கள்.
- உலகில் 66 சதவிகித மக்கள் வாகனங்களை வலது பக்கத்தில் ஓட்டுகிறார்கள். 34 சதவிகித மக்கள் இடது பக்கத்தில் வாகனங்களை ஓட்டுகிறார்கள்.
- 1991 ஆம் ஆண்டு இத்தாலியின் ஆல்ப்ஸ் மலையில் 5300 வருடங்களுக்கு முன் வாழ்ந்து சுமார் 40 வயதில் இறந்து போயிருக்கக் கூடிய மனிதனின் உடலை பணியில் உறைந்து கிடந்த நிலையில் கண்டுபிடித்தார்கள். இந்தப் பணியில் கண்டுபிடிக்கப்பட்ட மனித சடலத்துக்கு ஒட்ஸி என பெயரிட்டனர். ஐரோப்பாவில் கண்டுபிடிக்கப்பட்ட மிகப் பழமையான சடலம் இது.
- இந்தியாவில் சுமார் 80 இலட்சம் சிறிய மற்றும் நடுத்தர வர்த்தக நிறுவனங்கள் இயங்கி வருகின்றன. இவற்றில் தங்களுக்கென இணைய தளங்களைக் கொண்டிருக்கும் நிறுவனங்கள் சுமார் 4 இலட்சம் மட்டுமே
- 1834ஆம் ஆண்டு ஆங்கிலேய பொறியாளரான சர் ஆர்தர் காட்டன் கங்கை காவிரி இணைப்பு திட்டத்தை தயாரித்தார்.



## லேவியராகமத்தில் தேவனுடைய நாமங்கள்

1. கர்த்தர் 1:1
2. நான் உங்கள் தேவனாகிய கர்த்தர் 11:44; 18:42; 23:22
3. நான் பரிசுத்தர் 11:44
4. நான் உங்கள் தேவன் 11:45
5. உங்களை எகிப்து தேசத்திலிருந்து வரப்பண்ணின கர்த்தர் 11:45
6. நான் கர்த்தர் 18:5,6
7. உங்கள் தேவனும் கர்த்தருமாகிய நான் பரிசுத்தர் 19:2
8. உன் தேவன் 19:14; 25:17
9. நான் உங்களை எகிப்து தேசத்திலிருந்து புறப்படப் பண்ணின உங்கள் தேவனாகிய கர்த்தர் 19:36; 23:40; 25:38
10. நான் உங்களைப் பரிசுத்தமாக்குகிற கர்த்தர் 20:8
11. உங்களை மற்ற ஜனங்களை விட்டுப் பிரித்தெடுத்த உங்கள் தேவனாகிய கர்த்தர் நானே 20:24
12. கர்த்தராகிய நான் பரிசுத்தர் 20:26
13. உங்களைப் பரிசுத்தமாக்குகிற கர்த்தராகிய நான் பரிசுத்தர் 21:8
14. நான் அவர்களைப் பரிசுத்தமாக்குகிற கர்த்தர் 21:23, 22:9
15. நான் அவனைப் பரிசுத்தமாக்குகிற கர்த்தர் 21:15
16. நான் இஸ்ரவேல் புத்திரர் நடுவே பரிசுத்தர் 22:32
17. உங்கள் நுகத்தடிகளை முறித்து உங்களை நிமிர்ந்து நடக்கப் பண்ணின உங்கள் தேவனாகிய கர்த்தர் 26:13
18. நான் அவர்கள் தேவனாகிய கர்த்தர் 26:44

தொகுப்பு :
சகோ. B. பொற்செல்வன் ஆசீர்

### *நமது ஊழியங்களை தாங்குவோர் கவனத்திற்கு*

நீங்கள் ஜெபத்துடன் நமது மிஷனெரி ஊழியத்தை, வாலிப, மாணவ, சிறுவர் ஊழியத்தை, ஜெப ஊழியத்தை தாங்க காணிக்கைகள் அனுப்பும் போது வங்கி கணக்குகள் மூலமும் அனுப்பலாம்.

| வங்கி கணக்கு பெயர் | IFS Code | வங்கி பெயர் | கணக்கு எண் |
|---|---|---|---|
| மிஷனெரி ஊழியம்<br>Grace Ministries<br>Grace Ministries | SBIN0007629<br>TMBL0000156 | SBI Bazaar, Tuticorin<br>TMB Ltd., Sipcot Tuticorin | 10237757808<br>156100710400123 |
| வாலிப மாணவர் சிறுவர் ஊழியம்<br>Young Soul Winners Mission | TMBL0000035 | TMB Ltd., Pudukottai. Tuty | 035100710400087 |
| ஜெப ஊழியம்<br>Tabernacle of God Mission | TMBL0000033 | TMB Ltd., Elairampannai. | 033100710400026 |

நீங்கள் அனுப்பும் காணிக்கைகள் யாவும் ஊழியத்தில் வரவு வைக்கப்பட்டு உங்களுக்கு இரசீது அனுப்பப்படும்.

நீங்கள் காணிக்கை அனுப்பியதை 94432-89026 என்ற எண்ணிற்கு SMS மூலமாகவோ அல்லது கடித மூலமாகவோ எங்களுக்கு தெரிவியுங்கள்.